

LEARN AND SERVE

# பசுமை செய்தி இதழ்

ஆக்கம்: சுற்றுச்சூழல் மன்றம், ஸ்ரீ பர்வதவர்தினி அம்மன் பெண்கள் மேல் நிலை பள்ளி, இராமேஸ்வரம் மற்றும் பசுமை இராமேஸ்வரம் திட்டம்

*மார்ச் 2018*



## வாழ்த்துரை

மண்ணும், மணிநீரும், வனமும்

நம்முடைய வாழ்வாதாரம் என்கிறார்

திருவள்ளுவர்

இளைய தலைமுறையே நாம் சிந்தித்து

இணைந்து செயல்பட்டு

இயற்கை வளம் பேணுவோம்



**வே. சரஸ்வதி**

**பசுமை இராமேஸ்வரம்**

## முகவுரை

பசுமை போற்றும் பிஞ்சு கைகளின்
சொல் வண்ணம் செயல் வண்ணத்தாலே,
பசுமை வளர்ப்போம் என்ற எங்கள் எண்ணம்
இன்னும் ஆழப்படும் என்பது திண்ணம்
அழகுப் பணி இந்த பசுமை இதழ் பணி
மேன்மேலும் தொடர வாழ்த்துக்கள்
வாழ்க வளர்க!





**LEARN AND SERVE**

**க. கமலா M.Sc, M.Ed தலைமை ஆசிரியை, ஸ்ரீ பர்வதவர்த்தினி அம்மன் பெண்கள் மேல் நிலைப்பள்ளி**

## சுற்றுச்சுழல் மன்றம்

ஐந்தாவது இதழ் மலரும் இந்த சுப வேளை

சிறப்பாகுது எங்கள் பிள்ளைகளின் பசுமை  வேலை

இந்த மாதம் சிட்டுக் குருவி தினம், உலக வன நாள், உலக

தண்ணீர் தினம் என பல்வேறு முக்கிய கொண்டாட்டங்கள்

பரீட்சைகள்  நடந்தாலும் எங்கள் கண்மணிகளின்

பசுமை ஆர்வத்திற்கு இவ்விதழே சான்று

வாழ்க! வளர்க!

வணக்கங்களுடன்






**க. கோபிலட்சுமி B.A, M.P.Ed, M.Phil**
**ஒருங்கிணைப்பாளர், சுற்றுச்சுழல் மன்றம்**




## தண்ணீர்

*தீவைச் சுற்றிலும் நீர்!*
*அள்ளி பருக முடியா நிலை!*
*அள்ளி பருக இருந்த நீர் நிலைகள்*
*யாவும் பாவ மனிதனின் சுய நலத்தாலே*
*தூர்ந்து போயினவே!*
*மறை போற்றும் நீர் நிலைகளை*
*நாம் போற்றி பாதுகாத்தாலே*
*தண்ணீர் பஞ்சம் தீர்ந்திடுமே!*



**ம.மோகனப்பிரியா**
**ஒன்பதாம் வகுப்பு**
**'அ' பிரிவு**



## ஆவாரம்பூ

- ✓ *வெள்ளைபடுதல், சிறுநீர் எரிச்சல் தீர ஆவாரையின் பூ இதழ்களைச் எடுத்து நிழலில் உலர்த்தி, தூள் செய்து, ½ கிராம் அளவு, 2 கிராம் வெண்ணெயில் குழைத்துத் தொடர்ந்து சாப்பிட்டு வர குணமாகும்.*
- ✓ *ஆவாரை பூக்களை பசைபோல அரைத்து , புளித்த மோரில் கலக்கி. தொடர்ந்து 2 மாதங்கள் வரை குடித்து வர நீரழிவு நோய் கட்டுப்படும்.*
- ✓ *பசுமையான அல்லது உலர்ந்த பூக்களுடன், சமஅளவு பச்சைப்பயறு சேர்த்து அரைத்து, வெந்நீர் கலந்து பசையாக்கி, உடம்பில் தேய்த்து ஊறவைத்து, சிறிது நேரம் கழித்துக் குளித்தால் . தோல் அரிப்பு மற்றும் நமைச்சல் குணமாகும்.*

- ✓ ஆவாரையின் வேர், இலை, பட்டை, பூ, காய் இவற்றைச் சம அளவு எடுத்து , காயவைத்து, இடித்துத் தூளாக்கி, 10 கிராம் வீதம், காலை, மதியம், மாலை வெந்நீருடன் குடித்து வர . உடலில் உள்ள அனைத்து விதமான நோய்களையும் போக்கக்கூடிய அருமருந்தாகும்.
- ✓ இம்மருந்தால் சர்க்க்கரைவியாதி ,அதிக சிறுநீர் போதல் ,மிகுதாகம், மிகுபசி, உடல்மெலிவு, பலக்குறைவு ஆகியவை தீரும். உடல் பலம் பெறும். 90 நாட்கள் வரை தொடர்ந்து சாப்பிட்டு வர குணமாகும். இதற்க்கு ஆவரையின் பஞ்சாக சூரணம் என்ற பெயராகும்.
- ✓ சர்க்கரை நோயால் ஏற்படும் குழிப்புண்கள் மறைய ஆவாரம் இலையை அரைத்து இதன் விழுதை சிறிது நல்லெண்ணை விட்டு சட்டியில் இட்டு வதக்கி அதை சுத்தமான காட்டனில் வைத்து கட்டிவிடவேண்டும்.
- ✓ இதுபோல் ஒருநாள் விட்டு ஒருநாள் கட்டிவரகுழிபுங்கள் ஆறும். ரத்தத்தில் உள்ள சர்க்கரையின் அளவை கட்டுப்படுத்தும்.
- ✓ ஆவாரம்பட்டையை நீரில் இட்டுக் காய்ச்சிக் காலையில் வாய் கொப்பளித்தால் வாய்ப்புண்கள் எவ்விதமானதாயினும் விரைவில் ஆறிவிடும். ஈறுகள் ,பற்கள் கெட்டிப்படும். காய்ச்சிய நீரை குடிப்பதால் சிறுநீர்த்தாரை எரிச்சல் அடங்கும். ரத்தம் கெட்டிப்படுவது தவிர்க்கப்பட்டு இதய அடைப்புகள் வராமல் தடுக்கப்படும்.
- ✓ ஆவாரை விதையைக் காய வைத்து பொடி செய்து , நீர்விட்டுக் குழைத்து கண் இமைகளைச் சுற்றிப் பற்றிட கண்களின் சிவந்த

நிறம் நீங்கும். அத்துடன் கண் எரிச்சல், நீர் வடிதல் ஆகிய பிரச்னைகளும் குணமாகும்.

- ✓ ஆவாரம் பூவை உலர்த்திப் பொடி செய்து தினமும் காலையில் வெறும் வயிற்றில் 10 கிராம் அளவு சாப்பிட்டு வர ரத்தசோகை குணமாகும். புதிய ரத்தம் உற்பத்தி ஆகும். ஆவாரம் இலையைக் காய வைத்து மாலை வேளையில் வீட்டில் புகை மூட்ட இரவில் வரும் பூச்சிகள், கொசுக்கள் வீட்டை விட்டு விலகிப் போகும்.
- ✓ ஆவாரம் பூவை உலர்த்திப் பொடி செய்து வைத்துக் கொண்டு சம அளவு பாசிப்பயறு மாவு மற்றும் சீயக்காய் சேர்த்து தலைக்குத் தேய்த்து குளித்து வருவதால் தலைப்பொடுகு, அரிப்பு, முடி உதிர்தல் ஆகியன குணமாகும். கூந்தல் செழுமையாகவும், கருமையாகவும் வளரும்.
- ✓ ஆவாரையின் வேரைக் காயவைத்துப் பொடி செய்து தினமும் 10 கிராம் அளவுக்கு நீரில் கலந்து குடிக்க எவ்வகையாக காய்ச்சலாக இருந்தாலும் குணமாகும். ஆவாரம் பூவின் சூரணத்தை இரண்டு வேளை பெண்கள் வேளைக்குப் 10 கிராம் வீதம் சாப்பிட்டு வர கர்ப்பப்பைக் கட்டிகள் கரையும்.
- ✓ ஆவாரையைத் 500 மி.லி தண்ணீரில் காய்ச்சி குடித்து வர இரண்டாம் நிலைச் சர்க்கரை அளவு கட்டுப்படும். ஆண்மை பெருகும். விந்தணுக்களின் எண்ணிக்கையும், அதன் பயணத்தன்மையும்அதிகரிக்கும். மது குடித்ததால் ஏற்பட்ட ஈரல் நோய்கள் குணமாகும். மலச்சிக்கல் கட்டுப்படும். சிறுநீர்த்தாரைத் தொற்றுகள் சரியாகும்..

- ✓ கோரைக் கிழங்கு-250 கிராம், உலர்ந்த ஆவாரம் பூ - 100 கிராம், பூலான்கிழங்கு - 100 கிராம் ஆகியவற்றை அரைத்து தினமும் இந்தப் பவுடரை தேய்த்துக் குளிக்கும்போது தேவையில்லாத முடி உதிர்ந்து சருமம் பளிச்சென மின்னும்.
- ✓ (நாட்டு மருந்து கடைகளில் கிடைக்கும்.) ஆவாரம் பூ-100 கிராம், வெந்தயம்-100 கிராம், பயத்தம்பருப்பு - அரை கிலோ ஆகியவற்றை கலந்து அரைத்து. இந்தப் பவுடரை வெந்நீரில் கரைத்து வாரம் இருமுறை தலைக்கு அலசி வர, முடி நன்றாக கருப்பாக வளரும்.
- ✓ ஆவாரம் பூ, செம்பருத்தி பூ, தேங்காய் பால் ஒரு கப் , வாரம் ஒரு தடவை அரைத்துத் தலைக்குக் குளித்து வர . உடல் குளிர்ச்சியாகி, முடி கொட்டுவது உடனடியாக நின்று முடி வளரத் தொடங்கும்.
- ✓ ஒரு பிடி ஆவாரம் பூவை தண்ணீரில் போட்டு கொதிக்க வைத்து வடிகட்டி,தலைக்கு குளிக்கும்போது கடைசியில் இந்த தண்ணீரில் ஒரு எலுமிச்சம்பழத்தை பிழிந்து விட்டு தலையில் தடவி வந்தால் உடம்பு பொன்நிறமாவதுடன், புத்துணர்ச்சியும் கிடைக்கும்.
- ✓ ஆவாரம் பூ, கொழுந்து, பட்டை, வேர் இவற்றை சம அளவு எடுத்து நிழலில் உலர்த்தி இடித்து மெல்லிய துணியால் சலித்துக் கொண்டு . இந்தப் பொடியுடன் பசு நெய் கலந்து சூரணமாக செய்து 48 நாட்கள் தொடர்ந்து சாப்பிட்டு வர உள் மூலம் குணமாகும். ஆவாரம் பட்டையை நீர் விட்டு காய்ச்சி, கஷாயம் வைத்து, வாயைக் கொப்பளித்தால் வாய் துர்நாற்றம் போகும்.
- ✓ சிலருக்குப் பரம்பரையாக வழுக்கை வந்துகொண்டே இருக்கும். இப்படிப்பட்டவர்கள், தலையில் முடி கொட்ட ஆரம்பித்ததுமே.. 100 கிராம் ஆவாரம் பூவை அரைத்து. இதை அடுப்பில் வைத்து நீர் பதம் போகும் வரை காய்ச்சி . இதனுடன் கால் கிலோ தேங்காய்

எண்ணெய் கலந்து இதை முன் நெற்றியில் தினமும் நன்றாகத் தடவி வந்தால், முடி உதிர்வது ஒரே மாதத்தில் நிற்பதோடு, வழுக்கை ஏற்படாமலும் தடுக்கும்.

- ✓ ஒரு கைப்பிடி அளவு ஆவரம்பூவை எடுத்து, அதில் 200 மில்லி தண்ணீர் ஊற்றி கொதிக்கவைத்து அதை 100 மில்லியாக சுண்டகாய்சி , இதனை தினமும் குடித்து வர சர்க்கரைவியாதி,அடிக்கடி சிறுநீர் கழிப்பது,பாத எரிச்சல்,உடல் வறட்சி,உடலில் உண்டாகும் வேர்வை நாற்றம், உடல் உஷ்ணம் ஆகியவை குணமாகும்.
- ✓ ஆவாரை பூ "ஆவாரை பூத்திருக்க சாவாரைக் கண்டதுண்டா" என்றொரு பழமொழி உண்டு. பூத்திருந்தாலே போதுமாம். அதன் காற்று பட்டாலே ஆயுள் அதிகம்.

ஆவாரம் காய கற்ப மூலிகையாகும். நீரிழிவு நோயாளிக்கு இது மிகவும் சிறந்த மூலிகை ஆகும். இது நமது இராமேஸ்வரத்தில் கிடைக்கிறது இதை உபயோகப்படுத்தி நோயில்லா பெரு வாழ்வு வாழ்வோம்



**எனது தந்தை மற்றும் பெரியோர் பலருடன் கலந்துரையாடி தயார் செய்தது**

**இனியா ஸ்ரீ**
**ஏழாம் வகுப்பு**
**"ஆ" பிரிவு**




உலக வன நாள் மார்ச் 21 அன்று கொண்டாடப்படுகிறது

🌳🌲🌳🌲புவியின் "நுரையீரல்கள்" என அழைக்கப்படும் காடுகள், இன்று மனித செயற்பாட்டின் காரணமாக அழிவடைந்துவருகின்றன. இதன் காரணமாக புவியின் வெப்பநிலை அதிகரித்து பல்வேறு பாதிப்புக்களை எதிர்நோக்குகின்றோம்.

🌳🌲🌳🌲 வனங்களை பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தை உணர்த்தவும் மக்களிடையே விழிப்புணர்வினை ஏற்படுத்தவும் மார்ச் மாதம் 21 உலக வன நாளாக கொண்டாடப்படுகின்றது.

🌳🌲🌳🌲 இயற்கை பல வகையான உயிரினங்களும், மரங்களும், செடிகளும், அதில் விதவிதமான மலர்கள், காய்கள், கனிகள், உயிரினங்கள், என்று காலகாலமாக பரிணாம வளர்ச்சியில் மாற்றங்கள் ஏற்பட்டு இயற்கை என்று சொன்னாலே மனம் மகிழ்ச்சி அடைய கூடிய வகையில் இயற்கைக் காட்சிகள் நமது உள்ளத்தை பூரிப்படைய வைக்கும் திறன் கொண்டது ..!

🌳🌲🌳🌲இயற்கையுடனும், மற்ற உயிரினங்களுடன் நமக்கு இருக்கும் தொடர்பு, பரிணாம வளர்ச்சியில் மரபு வழியாக வந்த ஒரு இணைப்பு. மனிதர்கள் மன நிறைவு இல்லாமல் இருப்பதற்கும் காரணம் இயற்கையை விட்டு விலகி செயற்கையாக வாழ்வதே ஆகும்.

அந்தவகையில், உலக வன வளங்கள் தொடர்பிலான சுவையான தகவல்கள்:

💗🖤 உலகில் 4 பில்லியன் ஹெக்டேயர்கள் நிலப்பரப்பிற்கு காடுகள் காணப்படுகின்றன. அதாவது, புவி மேற்பரப்பில் 31% காடுகள் சூழ்ந்துள்ளன.

💗🖤 உலகில் அதிக பரப்பளவில் வன வளத்தைக் கொண்ட கண்டம் தென் அமெரிக்க கண்டம் ஆகும். தனது நிலப் பரப்பில் அரைவாசிக்கும் அதிகமான காடுகள் காணப்படுகின்றன.

💗🖤 உலகில் குறைந்த பரப்பளவில் வன வளத்தைக் கொண்ட கண்டம் ஆசியாக் கண்டம் ஆகும். தனது நிலப் பரப்பில் 20% காடுகள் காணப்படுகின்றன.

💗🖤 உலகில் அதிகளவில் வன வளங்களைக் கொண்ட நாடுகளாவன; ரஷ்யா, பிரேசில், கனடா, ஐக்கிய அமெரிக்கா, சீனா ஆகியனவாகும். உலகில் அரைவாசிக்கும் அதிகமான காடுகள் இந்த நாடுகளிலேயே காணப்படுகின்றன.

💗🖤 புவி மேற்பரப்பில் 6% ஈரவலயக் காடுகள் சூழ்ந்துள்ளன. உலகிலுள்ள தாவர மற்றும் விலங்கினங்களில் அரைவாசிக்கும் அதிகமானவை இக்காடுகளிலேயே காணப்படுகின்றன.
க்

💗🖤 அண்டாடிக்கா கண்டம் தவிர்ந்த ஏனைய அனைத்து கண்டங்களிலும் ஈரவலயக் காடுகள் காணப்படுகின்றன.

💗🖤 தென் அமெரிக்க ஈரவலயக் காடுகளில் 2,000க்கும் அதிகமான வண்ணத்துப்பூச்சி இனங்கள் காணப்படுகின்றனவாம்.

💗🖤 மத்திய ஆப்பிரிக்க ஈரவலயக் காடுகளில் 8,000 த்திற்கும் அதிகமான தாவர இனங்கள் காணப்படுகின்றனவாம்.

❤ உலகத்திற்கு தேவையான 20% ஆக்சிஜன் அமேசன் ஈரவலயக் காடுகளிலேயே உற்பத்தி செய்யப்படுகின்றது.

❤ உலகில் 1.5 பில்லியனுக்கும் அதிகமான மக்கள் தமது வாழ்வாரத்திற்கு காடுகளிலேயே தங்கியுள்ளனர்.

❤ உலகில் 300 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் காடுகளிலே வாழ்கின்றனர்.

❤ உலக சனத்தொகையில் மூன்றிலொரு பங்கினர் தமது எரிபொருள் தேவையினை விறகுகள் மூலமே பூர்த்தி செய்துகொள்கின்றனர். இப்படி பட்ட இயற்கையை மனிதன் எப்படி சிதைக்கிறான் என்றால் , உலகில் ஒவ்வொரு செக்கன்டுக்கும், கால்பந்தாட்ட மைதானத்தின் அளவான ஈரவலயக் காடுகள் அழிக்கிறான்.

💔 உலகில் வருடாந்திரம் 36 மில்லியன் ஏக்கர் நிலப்பரப்பிலான இயற்கை காடுகள் அழிக்கப்படுகின்றன. இது இங்கிலாந்து நாட்டின் பரப்பளவினை விடவும் பெரிதாகும்.

💔 காகிதாதி உற்பத்திற்காக உலகில் 50% ஆன மரங்கள் அழிக்கப்படுகின்றன. (World Resource Institute)

💔 உலகில் 80% க்கும் அதிகமான காட்டுத் தீ மனிதனாலேயே உருவாக்கப்படுகின்றன.

இயற்கையை நாம் அழித்தால் இயற்கை நம்மை அழித்துவிடும். இயற்கையை பாதுகாப்போம் நம் சந்ததியின் உயிருக்காக .

- இணையத்தில் படித்தது



**முத்து பீரீத்திகா செல்வி**

**ஏழாம் வகுப்பு**

**ஆ பிரிவு**



## உலக சிட்டுக்குருவி தினம்: மார்ச் 20

சிட்டுக் குருவி முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கும் பறவையினத்தைச் சேர்ந்த உயிரினமாகும். சிட்டுக் குருவிகள் பசரீன்கள் குடும்பத்தைச் சார்ந்தவை. இந்தியாவில் இவை வீட்டுக் குருவிகள், அடைக்கலக் குருவிகள், ஊர்க்குருவிகள், சிட்டுக்குருவிகள் ஆகிய பெயர்களால் அழைக்கப்படுகின்றன. காகத்திற்கு அடுத்து மனிதனுக்கு நன்கு அறிமுகமானபறவை குருவியாகும்.

சிட்டுக் குருவிகள் உருவத்தில் சிறியவையாகவும், இளம் சாம்பல் கலந்த பழுப்பு நிறத்திலும் இருக்கும். சிறிய அலகு, சிறிய கால்களுடன் காணப்படும். இவை 8 முதல் 24 செ.மீ. நீளமுள்ளவை. பழுப்பு சாம்பல், மங்கலான வெள்ளை என்று பல நிறங்களில் காணப்படும். கூம்பு வடிவ அலகுகளைப் பெற்ற இவை 27 முதல் 39 கிராம் எடை கொண்டவை. ஆண் பறவையில் இருந்து பெண் பறவை வேறுபட்டது. மேற்பாகம் தவிட்டு நிறத்தில் மஞ்சளும் கறுப்பும் கலந்த கோடுகள் கொண்டிருக்கும். அடிப்பாகம் வெளுப்பாக இருக்கும்

.

ஆசியா, ஐரோப்பா, ஆப்பிரிக்கா, அமெரிக்கா போன்ற பல நாடுகளில் குருவி இனங்கள் உள்ளன. இவை எங்கும் காணப்படுபவை. சிட்டுக் குருவிகளின் வாழ்நாள் சுமார் 13 ஆண்டுகளாகும். சிட்டுக்குருவிகள் மனிதர்கள் இருக்கும் பகுதிகளிலேயே வசித்தாலும் மனிதர்களோடு பழகுவதில்லை. இவற்றை செல்லப் பறவைகளாக வளர்க்க முடியாது. மரத்திலும், வீடுகளின் மறைவான இடங்களிலும் வைக்கோல் போன்ற

மெல்லிய பொருட்களைக் கொண்டும் கூடு கட்டி வசிக்கின்றன. இவற்றின் கூடுகள் கிண்ண வடிவில் இருக்கும். இவை குளிர் காலத்தில் கூட்டமாக ஒரு புதரில் ஒன்று சேர்ந்து இரவைக் கழிக்கின்றன.

சிட்டுக் குருவிகள் அனைத்துண்ணிகள் தானியங்களையும், புழு, பூச்சிகளையும் உணவாக உட்கொள்ளும். சில வகைக் குருவிகள் பூ மொட்டுகளையும் உண்ணும். *சிட்டுக் குருவிகள் முட்டையிட்டுக் குஞ்சு பொரித்து இனப்பெருக்கம் செய்கின்றன. மூன்று முதல் ஐந்து முட்டைகள் வரை இடும். முட்டைகள் பச்சை கலந்த வெள்ளை நிறத்தில் இருக்கும். ஆண், பெண் இரண்டுமே முட்டைகளையும், இளம் உயிரிகளையும் பாதுகாத்து வளர்க்கின்றன. குஞ்சுகள் பெரிதாகும் வரை கூட்டிலேயே வளர்கின்றன. பறக்கத் தொடங்கியவுடன் தனியே பிரிந்து விடுகின்றன.

சுற்றுச் சூழல் மாற்றங்களால் நாம் ஏற்படுத்தும் பல இழப்புகளில் மரங்களும் பறவைகளும் உலகெங்கும் அழிந்தும், குறைந்தும் வருவதால் சுற்றுச்சூழல் சீர்கெட்டு உலகம் வெப்பமயமாகி இயற்கைப் பேரழிவுகள் நேர்கின்றன. தற்போது பல நகர்ப்புறங்களில் இவை முற்றிலுமாக அழிந்துவிட்டன. அலைபேசியில் இருந்து வெளிவரும் (நுண்ணலைகள்) மின்காந்த அலைகளின் தாக்கம் இந்த குருவியினத்தின் இனபெருக்க மண்டலத்தை தாக்கி அவற்றை மலடாக மாற்றி விடுவதனால் இவற்றால் தங்களின் இனத்தை பெருக்க இயலவில்லை என கண்டறியப்பட்டுள்ளது.

சிட்டுக் குருவி இனத்தை அழியாமல் காக்க வேண்டும் என்று சுற்றுச் சூழல் ஆர்வலர்கள் வேண்டி வருகிறார்கள். எனவே மார்ச் 20-ம் தேதியை உலக ஊர்க்குருவிகள் தினமாகக் கொண்டாடி அவற்றைக் காக்கப் போராடி வருகின்றனர். இதனை உணர்த்தும் வகையில் பல நாடுகள் அஞ்சல் தலைகள் வெளியிட்டுப் பெருமைப் படுத்தியுள்ளன.



**பத்மா .T**
**பதினோன்றாம் வகுப்பு**
**ஆ பிரிவு**



## உலக தண்ணீர் தினம் – மார்ச் 22

*முந்தைய காலத்தில் கோடைக் காலம் துவங்கிவிட்டால் வீட்டுக்கு வெளியே பானையோ அல்லது ஒரு பாத்திரமோ வைத்து அதில் நீர் நிரப்பி வைப்பார்கள். வழியில் செல்வோர் அந்த நீரைக் குடித்து தாகம் தீர்த்துக் கொள்வார்கள் என்ற நல்ல நோக்கத்தோடு. ஆனால் அதுபோன்றதொரு காட்சியை தற்போது நாம் எங்காவது பார்க்க இயலுமா?*

*காண முடியும், வாசலில் குடங்கள் இருக்கின்றன. ஆனால் அவை நீர் நிரம்பி அல்ல, நீர் நிரப்ப, எப்போதாவது வரும் குழாய் நீருக்கும், குடிநீர் லாரிக்காகவும் காத்திருக்கும் குடங்கள் அவை.*

*முதலில் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் என்ன தெரியுமா? நீர் ஆதாரங்களை காக்க வேண்டும், தற்போது எத்தனை குளங்கள் இருந்த இடத்தில் அடுக்கு மாடிக் குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன, ஏரிகள் இருந்த இடங்கள் எத்தனை காலனிகள் அமைக்கப்பட்டுள்ளன. அங்கே தேங்கி நிற்க வேண்டிய நீர் எங்கே சென்று நிற்கும்? நினைத்துப் பார்த்ததா மனித சமூகம்? நீர் இருந்த இடத்தை காலி செய்து விட்டு அங்கே நாம் குடிபோனோம். தற்போது குடிநீர் இல்லை என்று அலைந்து கொண்டிருப்பதும் நாம்தான்.*

*70 விழுக்காடு பரப்பளவு நீர் இருந்தாலும் அதில் 97.5 விழுக்காடு கடலில் இருக்கும் உப்பு நீர்தான். மீதும் 2.5 விழுக்காடு அளவிற்குத்தான் நிலத்தடி நீர் உள்ளது. இதிலும் துருவப் பகுதிகளில் பனிப்பாறைகளாகவும், பனித்தரையாகவும் மாறிப் போயிருக்கிறது எஞ்சியுள்ள 0.26 விழுக்காடு நீரைத்தான் உலக மக்கள் அனைவரும் பகிர்ந்து கொள்ள வேண்டும்.*

*இந்த நிலையில்தான், ஐ.நா. சபை கடந்த 1992-ம் ஆண்டு சுற்றுச்சூழல் மற்றும் வளர்ச்சி குறித்த கூட்டத்தை கூட்டியது. கூட்டத்தில், நீர்வள பாதுகாப்பை வலுப்படுத்த வேண்டும் என்றும், அதை மக்களிடம் உணர்த்த `உலக தண்ணீர் தினம்' கொண்டாடப்பட வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது. அதன்படி, ஆண்டுதோறும் மார்ச் 22-ந் தேதி உலக தண்ணீர் தினம் சர்வதேச அளவில் கொண்டாடப்பட்டு வருகிறது.*

*நிலத்தடி நீரைப் பாதுகாக்க வேண்டியதும், நீர் ஆதாரங்களை காக்க வேண்டியதும், நீர் மாசுபடாமல் இருக்க வேண்டிய நடவடிக்கை எடுக்க வேண்டியதும் மனித சமுதாயத்தின் கடமையாகிறது.*

*இப்போது, உலகில் உள்ள 80 நாடுகளில் 40 சதவீத மக்கள் சரிவர தண்ணீர் கிடைக்காமல் அவதிபடுகின்றனர். 110 கோடி மக்கள் நீர் பற்றாக்குறை உள்ள பகுதிகளில் வாழ்கின்றனர். இப்படியே போனால், இன்னும் சில நூற்றாண்டுகளில் உலகமே பாலைவனமாக மாறிவிடும். மக்கள், குடிநீருக்காக ஒருவரை ஒருவர் கொன்றுப் போடும் நிலைதான் ஏற்படும்.*



இணையத்தில் படித்தது

**ஹேமா.A**
**பதினொன்றாம் வகுப்பு**
**'அ' பிரிவு**




## சுகவனம்

விலங்கிற்கோர் காட்டுவனம்
மறை தந்த இறைக்கு கோயில்தோறும் நந்தவனம்
வீடுதோறும் மனிதன் வாழ ஒரு காய்கறிவனம்
இவை அனைத்தும் இருக்கும்படி இருந்தால்
இந்த நாடே சுகவனம்



**ச. வித்யா ஸ்ரீ**
**ஏழாம் வகுப்பு**
**'அ' பிரிவு**





***மாணவி விக்னேஷ்வரி , 9ஆம் வகுப்பு மறு உபயோக அலங்கார பொருள் மற்றும் ஓவியம்***